சுருக்கம்

பணியமைப்பு – பயிற்சிப்பிரிவு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.பன்னீர்செல்வம் என்பவரது மகள் செல்வி.ப.கனிஷ்கா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது. – தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 20(6)(b) மற்றும் 28(?) ஆகியவற்றை தளர்வு செய்து இளநிலை உதவியாளர் பதவியில் 30.07.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ப்பி2)த் துறை

அரசாணை (2ப) எண்.51

நாள் 08.12.2020

சார்வரி வருடம் – கார்த்திகை 23,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.37669/பஅ3/2017, நாள் 14.11.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கடிதத்தில், அத்துறையின் பயிற்சிப்பிரிவில் தஞ்சாவூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காவலராக பணியாற்றிய போது பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.பன்னீர்செல்வம் என்பவரது மகள் செல்வி.ப.கனிஷ்கா என்பவருக்கு கருணை அடிப்படையில் இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் 25.07.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்நிலை அலுவலகமான ஒரத்தநாடு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 30.07.2018 முற்பகல் அன்று பணியில் சேர்ந்தார் எனத் தெரிவித்து தனியரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அக்கருத்துருவை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெயிடப்பட்டுள்ள ஆணைகளின்படி இந்நேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டிய தேவை எழாததாலும், பணியிடை மறைந்த திரு.எஸ்.பன்னீர்செல்வம் என்பவரது வாரிசுதாரான அவரது மகள் செல்வி.ப.கனிஷ்கா என்பவர்

த.பி.பா.,

கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பித்த நாளில் தனியர் 18 வயதினை பூர்த்தி செய்யாததாலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, பார்வை 3–இல் கண்ட அரசாணையில் வயது தொடர்பான வழிகாட்டுதல்களையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016–ல் 20(6)(b) மற்றும் 28(2) ஆகிய பிரிவுகளைத் தளர்த்தி, அவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 30.07.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தனியரது பணியினை அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஆகியவற்றினை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். மேலும், நிலுவைத் தொகை அதிகமாக வழங்கப்பட்டது எனப் பின்னர் தெரிய வந்தால், அத்தொகை அவரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும். இவ்வரசாணை குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3. இவ்வாணை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண்.32122/ஜி2/2020–1, நாள் 04.12.2020–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்(மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை – 600 032.
(இணைப்பு:– அசல் மூலச் சான்றுகள்) (அசல் மூலச்சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).
செல்வி.ப.கனிஷ்கா, இளநிலை உதவியாளர் (வழி:- ஆணையர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை – 600 032).
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்.

நகல்
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி2) துறை, சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ / அநமு–2) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல் / சுத்த நகல். (கோப்பு எண்.22643/ப்பி2/2019).

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

ந.க.எண் : 2771/அ1/2019-1
நாள் : 06.01.2021

துணை இயக்குநர்/ முதல்வர் அலுவலகம்
அரசு தொழிற்பயிற்சி நிலையம்,
தஞ்சாவூர்

அனுப்பப்படுகிறது

துணை இயக்குநர்/முதல்வர்
அரசு தொழிற்பயிற்சி நிலையம்
தஞ்சாவூர்-7.
06/01/2021

பெறுநர்
செல்வி. ப.கனிஷ்கா, இ.நி.உ,
அ.தொ.ப. நிலையம், தஞ்சாவூர்